செ.வெ.எண்: 50/மார்ச் நாள்: 30.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் வாக்களிக்கும் முறைகள் குறித்து பொதுமக்களுக்கு

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாலிநோக்கம் மற்றும் சிக்கல் ஆகிய கிராமங்களில் இன்று (30.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் வாக்களிக்கும் முறைகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாலிநோக்கம் கிராமத்திலுள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பங்கேற்றார். தொடர்ந்து தமிழ்நாடு உப்பு நிறுவன வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்து கொண்டனர். அதன்பின்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டுப்பிரசுரங்களை வழங்கி சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாளன்று தவறாமல் வாக்களித்திட வேண்டுமென எடுத்துரைத்தார்.

தொடர்ந்து முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிக்கல் கிராமத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் வாக்களிக்கும் முறைகள் குறித்து பொதுமக்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் விளக்கம் அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ராமையா (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்), உள்பட அரசு அலுவலர்கள், தமிழ்நாடு உப்பு நிறுவன பணியாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**